## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

**CC.No.166/2018 L.W.4 P.W.4**

| | |
|---|---|
| Name | : வேல்அரசன் |
| Father/Husband Name | : வேலுமணி |
| Age | : 24 |
| Village | : காரையூர் |
| Taluk | : திட்டக்குடி |
| District | : கடலூர் |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதிமுறைகளின்படி 23.01.2023 நாளாகிய இன்று திரு.அன்பு பி.ஏ., பி.எல்., நீதித்துறை நடுவர், திட்டக்குடி அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

**1.** நான் கோனூரில் குடும்பத்துடன் வசித்து சென்னையில் ஒரு தனியார் கம்பெனியில் பணிபுரிந்து வருகிறேன். எனக்கு அ.சா.1 முதல் அ.சா.3, பட்டியல் சாட்சிள் மற்றும் ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 2018 ம் வருடம் தேதி, மாதம் எனக்கு சரியாக தெரியவில்லை மதியம் 1.30 மணியளவில் காரையூரில் உள்ள கோவில் பக்கத்தில் இருக்கும் வயலில் இருந்து நான் வந்துக்கொண்டிருந்தேன். அப்போது அ.சா.1 இளமதியின் கணவர் பட்டியல் சாட்சி 5 கார்த்தி என்னிடம் ஒரு கையெழுத்து கேட்டார் எதற்கு என்று தெரியாது நானும் கையெழுத்து போட்டேன். தற்போது சமூகம் நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள எந்த கையொப்பமும் என்னுடையது இல்லை. பின்னர்தான் நான் ஊருக்கு வந்து சம்பவத்தை விசாரிக்க அப்போதுதான் தெரியும் ஆஜர் எதிரி சதாசிவத்திற்கும், அ.சா.1 இளமதிக்கும் பிரச்சனை என்று சொன்னார்கள். சம்வம் எனக்கு நேரடியாக தெரியாது. போலிஸார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கருதி, அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் இ.சா.ச.பிரிவு 154 (1) ன் கீழ் குறுக்கு விசாரணை**

கடந்த 11–09–2018 ம் தேதி இரவு 8.00 மணிக்கு நானும், எங்கள் ஊரைச்சேர்ந்த பழனிவேல் என்பவரும் ஊர் மாரியம்மன்கோவில் அருகில் அமர்ந்திருந்ததாகவும், அப்போது கிழக்கு தெருவைச்சேர்ந்த கார்த்தி என்பவர் வீட்டில் சத்தம் கேட்டு ஓடிப்போய் நாங்கள் பார்த்ததாகவும், அப்போது ஆஜர் எதிரி அ.சா.1 இளமதியிடம் பங்கு கேட்டு அ.சா.1 ஐ காமகுரோதமான வார்த்தைகளால் திட்டி தகராறு செய்ததாகவும், அ.சா.1 ன் தலைமுடியை பிடித்து இழுத்து கீழேதள்ளி கையாலும், காலாலும் உடம்பில் அடித்து நெஞ்சில் உதைத்து கொலை மிரட்டல் விடுத்ததாகவும், உதைத்துவிட்டு புதைத்துவிடுவேன் என்று கூறியதாகவும், இதை விலக்கிவிட்டு நானும், பழனிவேலும் சமாதானம் செய்ததாகவும், போலிஸாரிடம் தெரிவித்துவிட்டு தற்போது எனக்கு தெரிந்த ஏதோ ஒரு காரணத்திற்காக எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல.

**எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்குரைஞர் ஆஜரில்லை, குறுக்கு விசாரணை இல்லை.**